

# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## 'விசுவாசத்தை கைவிடாதவர்களுக்கே' பலன் உண்டு!

**த**ன் ஒரே குமாரத்தியின் சுகத்திற்காக யவீரு என்ற ஜெப ஆலயத்தலைவன் இயேசுவிடம் ஜெபித்து, அவரை அழைத்து வந்தபோது ஏற்பட்ட **விசுவாச சோதனையே** "உன் குமாரத்தி மரித்துவிட்டாள்" என்ற சேதி! அப்போது இயேசு யவீருவிடம் கேட்டதெல்லாம், உன் மகள் மரித்தாலும் "நீ அவிசுவாசமாகிய **பயத்திற்கு இடம் தராதே!** ONLY BELIEVE..... அதாவது, விசுவாசத்தை உடையவனாய் மாத்திரம் இரு" என்றார். இப்படி விசுவாசித்து வாழ்வது, சூழ்நிலையைக் கண்டு அழும் மக்களுக்கு, நகைப்பாகவே இருக்கும்! அப்படித்தான் அங்குள்ளவர்கள் நகைத்தார்கள்! இயேசுவோ, விசுவாசத்தை பரிகசித்து நகைத்த அவிசுவாசிகளைத் தன் பார்வையை விட்டு அகற்றிவிட்டு, விசுவாசித்த யவீரைக் கொண்டு, மரித்துப்போன மகளை உயிர் பெறச் செய்தார்!! (லூக்கா.8:41,50,54).

"மரித்தாலென்ன? மரியாமலிருந்தாலென்ன? துயரமான சூழ்நிலைக்காக அழும் மார்த்தாளே, நீ விசுவாசிக்கிறாயா?" என்றே அவளை விசாரித்தார்! "ஆம், ஆண்டவரே" எனக் கூறிய மார்த்தாளைப் போலவே, நாமும் எந்நிலையிலும் அந்த விலையேறப் பெற்ற 'விசுவாசத்தை' இழக்காதிருக்க கவனம் கொண்டிருக்கக் கடவோம் (யோவான்.11:26,27), ஆமென். *-tr*

பெட்டகம் 39 ஆகஸ்ட் 2023 பரல்கள் 08



## நிலைத்திருக்கும் அன்பில் வேரூன்றிய இருதயம் வேண்டும்!

"தெய்வ அன்பின் வல்லமையே" நாம் ஒரு சேனையைப் போன்ற ஐக்கியத்தில் இசைந்திருக்கவும், நம் செய்கையாவிலும் நம்மை சோர்ந்து போகாதிருக்கவும் வல்லமைக்கொண்டது! எனவேதான் அன்பிற்கு ஓயாத எதிர்ப்பு அலைமோதுகிறது! நாம் அன்பை இழந்து, சத்தமிடுகிற வெண்கலம்போலவும் ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் மாறுவதற்கே இந்த எதிர்ப்பு! இதினாலேதான், அன்பின் ஜீவியஞ்செய்ய விரும்புகிறவர்களாகிய நாம், தொடர்ந்து நம்மைப் பரிசோதித்துச் சுத்திகரிக்கும் தேவஆவியானவரைத் தேடும்படி நெருக்கி ஏவப்படுகிறோம்!

இவ்வாறு, நம்மிடமுள்ள அன்பை சத்துரு எதிர்ப்பதற்கு இன்னொரு காரணமுண்டு, அதுஎன்னவென்றால்: "நீங்கள் அன்பில் நிறைந்திருக்கும்போது, பிறரிடம் மாறாத அன்புடையவர்களாய் இருப்பீர்கள். ஆனால், உங்கள் உள்ளத்தில் "சிறிதளவு அன்பற்ற தன்மையை" சத்துரு போட்டுவிட்டால், உங்கள் சம்பந்தப்பட்டவர்களின் வாழ்விலும் 'அதே அன்பற்ற தன்மை' பரவிவிடும்! இந்த யுக்தியைத்தான் சத்துரு பயன்படுத்துகிறான்! சத்துருவின் தந்திரம் அறிந்து, நம்முடைய இருதயத்தில் எப்போதும் அன்பு நிறைந்து வழிந்தோட, பரிசுத்தாவியின் அருள்மாரியை இடைவிடாது தேடி, அன்பில் வேரூன்றி வளர்வோமாக!

*-Ed*

### 2023 'பரலோக பொக்கிஷங்கள்' சந்தா புதுப்பிக்கவும்

வருட சந்தா ரூ.**170/-** தயவுசெய்து உடன் M.O செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு **ஆகஸ்ட் 10-ம் தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் **3**பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.**140/-** அயல்நாடு ஒரு பிரதி ரூ.**950/-** அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் **'புதிது'** என்று குறிப்பிடவும். நன்றி!

**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!**
**சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
(பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலமும் அனுப்பலாம்)
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 9843049935 Ph (O) 0452 - 3585200
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : paralogapokkishangal

## ‘கர்த்தரே’ நம் பெலனாய் கொண்டு வாழ்வது நம் பாக்கியம்!

*உயர்விலும் தாழ்விலும் அவர் பெலன் நமக்கு போதும்*

*பெலன்குன்றிசோர்ந்துபோனநேரத்தில்“உன்தேவன்உனக்கு பலத்தைக் கட்டளையிட்டார்” (சங்.68:28) என நம்மிடம் கூறுவது எத்தனை ஆறுதலாயிருக்கிறது. வாழ்வின் முக்கிய பிரயாசங்களில் தீவிரமாய் நாம் முன்னேறிச் செல்வதற்கு* “**போதுமான பெலத்தை**” *கர்த்தர் ஒருவரே நமக்குத் தரமுடியும்! “உள்ளான மனிதன், கர்த்தருடைய ஆவியினால் பெலப்படுத்தப்படுகிறான்” என கூறும் வசனம், பெலவீனம் இல்லாமல் நம்மைத் தொடர்ச்சியாய் முன்னேறிச் செல்ல நடத்துகின்றது!*

*“உங்கள் நாட்களுக்குத்தக்கதாய் (அந்தந்த தேவைக்குத் தக்கதாய்) உன் பெலமும் இருக்கும்” என்பதே, தேவன் தம்முடையவர்களுக்கு அளித்திருக்கும் வாக்குதத்தமாகும்:*

*ஆம், உறுதி தளர்ந்த நிலையில், பெலன் கொண்ட சித்தத்தைத் தருகிறார்!*

*அன்பு தாழ்ச்சி நேரத்தில், பெலன் கொண்ட அன்பைத் தருகிறார்!*

*நிதானமற்ற நிலையில், உறுதியான தீர்மானத்திற்குப் பெலன் தருகிறார்!*

*ஒப்புக்கொடுக்கப்பட்ட ஜீவியத்தையும், ஊழியத்தையும் நிறைவேற்ற பெலன் தருகிறார்!*

### 1) ‘முன்னேறிச் செல்ல’ கர்த்தர் எனக்குப் பெலனாயிருக்கிறார் :

*‘இனி நம்பிக்கை இல்லை’ என்ற நிலையிலிருந்து முன்னேறிச் செல்ல அவரே நமது பெலனாயிருக்கிறார்!* **திரும்பி வர வழி இல்லாத குறுகிய சந்திற்குள்** *மனம் தளராது செல்ல பெலன் அளிக்கிறார். தொடர்ச்சியான நீண்ட பயணத்தில் ‘ஏதாவது ஒன்று உள்ளத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்தும்’ என்ற* **நம்பிக்கையற்ற நிலையிலும்** *முன்னேறிச் செல்ல பெலன் தருகிறார். ஒரேவித வேலை செய்வதில் ஏற்படும்* **சலிப்புத்தன்மையிலிருந்து** *முன்னேறிச் செல்ல பெலன் தருகிறார்!*

**2) 'செங்குத்தான பர்வதம் ஏற' கர்த்தர் பெலன் தருகிறார்!**

*கிறிஸ்துவோடு கடந்து வரும் வாழ்க்கையில், ஆங்காங்கு ஏற வேண்டிய குன்றுகளை 'ஏறி வர' கர்த்தர் பெலன் தருகிறார்.*

**3) 'பள்ளத்தாக்கின் தாழ்விடம் இறங்கி வர' கர்த்தர் பெலன் தருகிறார்!**

*உயர் ஸ்தலத்திலிருக்கும் குளிர்ந்த காற்றையும், இதமான சூரிய வெப்பத்தையும் விட்டுவிட்டு, வெப்பமும் வியர்வையும் நிறைந்த தாழ்விடத்திற்கு வருவது எளிதானதொன்று அல்ல! அதுபோன்ற சஞ்சல நேரங்களில் நம் இருதய சோர்வை தாண்டிச்சென்று தாழ்விடம் இறங்கி வர, ஆண்டவரே நமது பெலனாயிருக்கிறார். உஷ்ணமான, வறுமையான தாழ்விடத்திற்கே 'மிஷனெரிகள்' ஊழியம் செய்திட தேவபெலன் பெற்றிருந்தார்கள்! ஒருசமயம், ஒரு வயோதிப சகோதரன் என்னிடம் பேசும்போது "முதிர்வயதை கடந்து வரும் எனக்கு, ஒவ்வொரு நாளும் என்னுடைய பெலன் குன்றி வருவதைப் பார்க்கிறேன்" என வெகுவாய் சஞ்சலத்தோடு கூறினார். இவ்வித வயோதிப சஞ்சலத்தையும் மேற்கொண்டு வர, கர்த்தரே நமது பெலனாயிருக்கிறார்!*

**4) ஒன்றும் வேலை இல்லாமல் 'அமர்ந்திருப்பதற்கும்' கர்த்தர் நமது பெலனாயிருக்கிறார்!**

*இதுவே இன்றைய மானிடர்களுக்கு அசாத்தியமானதாய் காணப்படுகிறது. ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளும் சம்பாஷணையில், சும்மாயிருப்பதற்குரிய சூழ்நிலையை அடைந்தவர்கள், மனம் உடைந்து "ஏதாவது ஒரு வேலையை செய்து கொண்டு இருந்தால் நலமாயிருக்குமே?" என அங்கலாய்ப்பதைக் கேட்டிருக்கிறோம். தன் குழந்தை வியாதிப்பட்டிருக்கையில், குழந்தையின் அருகில், இந்த தாய் மனவேதனையோடு நீண்ட நேரம் பொறுமையாய் அமர்ந்திருக்க வேண்டியதை, அந்த தாய் பெரிய சோதனையாகவே கருதுகிறாள்! உண்மைதான், யாதொன்றும் செய்ய முடியாத நிலையில் "அமைதியாய் அமர்ந்து காத்திருப்பதற்கு" பரத்தின் வலிமையான பெலன் நமக்குத் தேவையாயிருக்கிறது.* **கர்த்தரோ, தம்முடையவர்களுக்கு 'எவ்வித நிலையிலும்' பெலனாயிருக்கிறார்!** *நம்முடைய தகுதி அல்லது நம்முடைய மனநிறைவு கர்த்தரால் உருவாகி இருக்கிறது என, பவுலைப் போல அறிக்கை செய்யும் பாக்கியமே, இந்த கேடான உலகத்தில் நித்திய பேரின்பத்தோடு வாழும் பாக்கியமாகும்!*

*- Mrs.சார்லஸ் கஃவ்மென்*

ஆண்டவராகிய இயேசு இந்த பூமிக்கு மீண்டுமாய் வெளிப்படும் நாளை, பல்வேறு ரூபத்தில் நாமாக விமர்சனம் செய்யும் ஒரு நிகழ்ச்சியாய் பிரசங்கிப்பது தவறு! ஏனெனில், அந்நாளை நாமாக அனுமானித்து விமர்சனம் செய்வது பாவமேயாகும். இயேசுவின் இரண்டாம் வருகையை "**தெய்வ பக்தியின் அடிப்படை இல்லாமல்**" கேட்பவர்களின் மனதை பரவசமடையச் செய்ய வேண்டும் என்பதற்காக, பல்வேறு அனுமானங்களை பிரசங்கித்து "பாவம் செய்கிறவர்களாகவே" இன்றைய பிரசங்கிகளில் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் தங்களை 'தீர்க்கதரிசன போதகர்கள்' என கூறிக்கொண்டாலும், அறிவின் யூகத்தின்படி கூறிடும் அவர்களின் விளக்கங்கள் தவறானதேயாகும்!

**கிறிஸ்துவின் வருகையைக் குறித்து, இதுபோன்ற ஊழியர்கள் தங்கள் யூகமான கருத்துகளை 'அரிதியிட்டு உறுதியாக கூறுகிறபடியால்' அநேக விசுவாசிகள் 'வேதப்பூர்வமாய் சிந்திக்க முடியாமல்' தடை செய்யப்பட்டு விடுகிறார்கள்!**

கிறிஸ்து மீண்டுமாய் வெளிப்படுவதை **வேதாகம பக்தர்கள்** தங்கள் சொந்த அனுமானத்துக்கு இடங்கொடாமல், தேவ பக்திக்கு ஏதுவாகவே சுட்டிக்காட்டினார்கள்:

1) பேதுரு குறிப்பிடும்போது, 'இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது' என குறிப்பிட்டு, அவர் வெளிப்படும் நாளை **எதிர்பார்த்து இருக்கும்** பக்தி உணர்வை முன் வைத்தார்! (1பேதுரு 1:7).

2) பவுல் குறிப்பிடும்போது, "நீதியின் கிரீடம் எனக்கு மாத்திரமல்ல, 'அவர் பிரசன்னமாகுதலை' **விரும்பும் யாவருக்கும்** அதை தந்தருளுவார்" என முக்கியப்படுத்தினார்! (2தீமோ.4:8).

3) யோவான் குறிப்பிடும்போது, இயேசுகிறிஸ்து மறுபடியுமாய் வெளிப்படுவார் என கூறிவிட்டு "அவர் மேல் இப்படிப்பட்ட **நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும்,** அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல தன்னையும் சுத்திகரித்துக்கொள்கிறான்" என்ற தகுதியாகும் நிலையை கோடிட்டு எழுதினார்.

பேதுருவும் அவ்வாறே, கிறிஸ்து வெளிப்படப்போகும் நிகழ்ச்சியை முன் வைத்து, **இன்று நமது விசுவாசம் சோதிக்கப்படுவதை** தொடர்புபடுத்தி எழுதினார் (1பேதுரு 1:6,7)..... "துன்பப்பட வேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்ச காலம் பலவிதமான சோதனைகளாலே துக்கப்படுகிறீர்கள். அழிந்து போகிற

*பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும். அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற* **உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு புகழ்ச்சியும் கனமும் மகிமையும் உண்டாக காணப்படும்!"** *என அறிவித்து, இந்த வாக்கியங்களை தியானிக்கிற அனேகருடைய உள்ளத்திலும் தேவ பக்தியை அனல் மூட்டி எழுப்பினார்.*

"கிறிஸ்து மீண்டுமாய் வெளிப்படுவார்!" என்ற வாக்கியம், கிறிஸ்தவ விசுவாச ஜீவியத்திற்கு அதிக வலிமை சேர்க்கக்கூடியதொன்றாகும். ஆகவே, அவர் வெளிப்படும் அந்த மாபெரும் நிகழ்ச்சியை எந்தவொரு கிறிஸ்தவனும் புறக்கணியாமலிருக்க ஜாக்கிரதை கொண்டிருக்க வேண்டும். ஆகிலும் "வரக் காத்திருக்கும் இந்த நிகழ்ச்சியை" சிலர் வேதாகமத்தை கஷ்டப்பட்டு ஆராய்ந்து, தெளிவில்லாத வியாக்கியானங்களை கூறுவதைப்போல், நாம் ஒருவரும் இருந்துவிடக்கூடாது.

**நம்மில் ஒருவரும் 'அவருடைய இரண்டாம் வருகையை' அலசி ஆராய்ந்து உபதேச கிளர்ச்சி ஏற்படுத்தவோ அல்லது தங்களுக்குச் சொந்தமான ஒரு அர்த்தத்தை அறிவித்திடவோ, நம்மிலுள்ள யாதொருவரும் செய்திட கர்த்தர் விரும்புவதேயில்லை!**

*அவ்வாறு இருந்தும், "தனி மனித - ஆராதனை குழுக்கள்" (Cults) இவ்வித செயலைத்தான் செய்கிறார்கள். குறிப்பாக "தீர்க்கதரிசன கண்மூடித்தனமானவர்கள்" தங்கள் முழு முயற்சியை வைத்து 1) 'அவர் வெளிப்படுவார்' என்ற வார்த்தையைக் குறித்த தர்க்கங்களையும், 2) 'எங்களுக்கு கிடைத்த வெளிப்பாடு' என மார்த்தட்டும் பெருமைகளையும், 3) 'வெளியரங்கமானது' என்றோ அல்லது 'மறைபொருளை வெளிப்படுத்துகிறோம்' என்றோ, தங்களை ஆவிக்குரிய மேன்மையானவர்களாய் காட்டவும் முயற்சிக்கிறார்கள்! இதுபோன்ற தலைவர்கள் 'வெளிப்பாடு என்ற பெயரில்' பல்வேறு அர்த்தங்களை புத்தகம் புத்தகமாக எழுதி குவிப்பார்கள். நான் கண்ட அனுபவத்தில், ஒரு பிரசங்கி, தான் வலியுறுத்த விரும்பிய சில வார்த்தைகளை* ***'எப்படியாவது நிரூபித்துவிட'*** *கட்டாய திணிப்பு முயற்சி எடுப்பார்கள். இதுபோன்றவர்களை நீங்கள் சந்திக்க நேரிடும்போது, அவர்களை விட்டு விலகுவதே நல்லது!*

**ஏனெனில் "அங்கீகரிக்கப்பட்ட கிறிஸ்தவ சத்தியங்களை" ஊன்றக் கட்டுவதற்குப் பதிலாக, தங்களுக்கென்று சொந்த வெளிப்பாட்டு சத்தியங்களை கட்டத் துணிவது, ஒரு தனிமனித அல்லது ஒரு மார்க்க கண்மூடித்தனத்திற்கே நம்மை கொண்டு சென்றுவிடும்!**

*இவைகளை நான் குறிப்பிட்டு எழுதுவதற்கு காரணம் என்ன? நான் வைத்திருக்கும் வேதாகமம் ஆவிக்குரிய சிந்தை கொண்ட யாவரும் புரிந்து கொள்ளும்படியான மிகவும் தெளிந்த, எளிமையான புத்தகமேயாகும். மாம்சீக சிந்தை கொண்டவர்கள் மாத்திரமே வேதப்புத்தகத்தை விளங்கமுடியாத புத்தகமாக காண்பித்து* **"அது தங்களுக்கு மாத்திரமே வெளிப்பட்டதாக"** *அறிவிப்பார்கள். அதை சாதித்திட இவர்கள் எடுத்துக்கொள்ளும் கடின முயற்சி, அப்போஸ்தலர் காலம் தொட்டு, பாய்ந்தோடும் ஜீவ மார்க்கத்துக்கு முரணாகவே இருக்கும்! குறிப்பாக கர்த்தருடைய வருகையைக் குறித்த விளக்கங்களை வேதாகமத்தைப்போல் எளிய விசுவாசமாய் இல்லாமல்* **'எங்கள் வெளிப்பாடு'** *என முக்கியப்படுத்தி பிரசங்கிக்கும் யாதொரு நபரைக்குறித்தும் நாம் எச்சரிக்கையாய் இருப்போமாக!*

*அன்று யோர்தான் நதியில், யோவான் ஸ்நானகன் ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருந்தபோது இயேசு அங்கு வெளிப்பட்டார்! அது அவருடைய 30-வது வயதில் நடைபெற்றது. இப்போது, அன்று அவர் தோன்றிய வெளிப்பாட்டை பேதுரு குறிப்பிடவில்லை! அதுபோலவே, எருசலேமில் அவர் வெளிப்பட்டு, ஜனங்களோடு நடந்து, பரிசேயர்களோடும், மூப்பர்களோடும், ரபீக்களோடும், சாதாரண ஜனங்களோடும் பேசி சஞ்சரித்தார்! அதுவும் அவருடைய 30-வது வயது அளவில் நடந்தது. அவர் திடீரென்று ஆலயத்தில் தோன்றி "வழக்கம் போல் தங்கள் ஆடுமாடுகளை விற்பதற்கு வந்த காசுக்காரர்கள் மத்தியிலே இயேசு வந்து நின்றார்! அதுமாத்திரமல்ல, ஒரு சாதாரண கயிற்றை வைத்தே ஆடுமாடுகளையும் காசுக்காரர்களையும் ஆலயத்திலிருந்து துரத்தினார்". இவ்வாறாக, மனுஷரோடு மனுஷராக அன்று அவர் பூமியிலிருந்து வெளிப்பட்டதையும் பேதுரு குறிப்பிடவில்லை!*

அது, கடந்த 20- நூற்றாண்டுகளுக்கு முன்பாக சுமார் 33- ஆண்டு காலம் அவர் தோன்றி வெளிப்பட்டதேயாகும். ஆனால் இப்போதோ **"இனி வெளிப்பட இருக்கும்"** இயேசுவை மகிழ்ச்சியோடு பேதுரு அறிவிக்கிறார்!

*பேதுரு, அழகுபட மிகுந்த மகிழ்ச்சியோடு அறிவிக்கும் செய்தி என்னவென்றால்: "உங்கள் விசுவாச பரீட்சை! உங்கள் துன்பங்கள்! உங்கள் கீழ்ப்படிதல்! சிலுவை ஏந்தி குருவை பின்சென்ற வாழ்க்கை! ஆகிய அனைத்தும், உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையும் உண்டாகும்படி இயேசு கிறிஸ்து வெளிப்படுவார். இந்த மகிமையான வெளிப்படுதல் இனிவர காத்திருக்கிறோம்! ஆ இது ஒன்றே, "கர்த்தர் வருகிறார்" என்ற எதிர்பார்ப்பின் உசிதமான செய்தியாகும்!!*

*- A.W.டோசர்*

## "போதுமென்ற மனம்" ஜெயவாழ்வின் இரகசியம்!

*தேவசித்தம் செய்வதிலும் 'இருப்பது போதுமென' வாழுங்கள்*

விலையேறப்பெற்ற அவருடைய உத்தரவுகளை பெற்றுக் கொள்ளும் உண்மையான ஆத்துமாக்கள் கூட, மனுஷீகமாய் சில தவறுகளை செய்து விட முடியும். 'அப்போது நடந்துவிட்ட' சில நிகழ்ச்சிகள், அவர்களை தடுமாறச் செய்திட வாய்ப்பு இருக்கிறது. அவர்களுடைய தடுமாற்றம் "கர்த்தருக்கு உண்மையாய் இருக்க வேண்டுமே" என்ற மிஞ்சிய விருப்பமாயும் இருக்கலாம்! அதுபோன்ற சமயமே, அவர்களின் தடுமாற்றத்தை தவிர்க்க முடியாததாய் மாற்றி விடுகிறது. இச்சமயங்களில், தன்னை நம்பி வாழும் இந்த ஆத்துமாக்களை "தேவன் கைவிடுவாரோ? நிச்சயமாய் கைவிட மாட்டார்!" தனக்கே அர்ப்பணித்து வாழும் அவர்களின் தடுமாற்றத்தை நிலை நிறுத்துவதற்கு, ஏதாவது ஒரு அற்புதத்தை நிகழ்த்துவார். இவர்கள் **தேவனுடைய பொதுவான சித்தத்திற்கு** தங்களை முழுமையாய் ஒப்புக்கொடுத்தவர்களாயிருக்கக்கூடும். ஆகிலும் 'இப்போது நடந்து விட்ட நிகழ்ச்சிகளில்' அவர்கள் வீழ்ச்சியடைந்தார்கள்!

> ஏனெனில் "பொதுவான தேவ சித்தத்திற்கு" கீழ்ப்படிந்த அவர்கள் 'இப்போது' வந்த தேவ கட்டளைக்கு கீழ்ப்படியவே தடுமாற்றம் கொண்டார்கள்! எப்படியிருந்தாலும், திவ்ய கட்டளையை நிறைவேற்ற வாஞ்சித்த அவர்கள், எந்த வீழ்ச்சியிலிருந்தும் உடனே எழுந்து தங்களை புதுப்பித்துக்கொள்வார்கள். தேவனுடைய உதவியைக் கொண்டு சரிசெய்து கொண்ட இவர்களுக்கு, சகலமும் நன்மையாகவே நடந்திடும்!

ஆகிலும், இவ்வித ஆத்துமாக்கள் **எந்த சூழ்நிலையிலும் உத்தமமாய் நிலை நின்றிட உறுதி கொண்டிருந்தால் 'தேவனுடைய உத்தரவை' தளர விட்டிருக்க மாட்டார்கள்!** அவருக்குள் பழகி வந்த எனக்கு இவ்வித தேவனுடைய வழிமுறைகள் 'பகலைப்போல்' பிரகாசமாயிருக்கிறது! தேவன் நேர்த்தியாய் பொருத்தி வைத்திருக்கும் எலும்புகள், ஒரு விபத்தில் விலகிச்செல்லும்போது (Dislocated) அது மீண்டும் தன்னுடைய இடத்தை அடையும்வரை 'தொடர்ச்சியான வலியைத் தருகின்றது'. அதுபோலவே தேவனுடைய உத்தரவில் திருப்தியற்ற ஆத்துமாக்கள், தாங்கள் நிலைத்திருந்த இடத்தைவிட்டு விலகி துயரமடைகிறார்கள்! அவருடையவர்களாகிய நாம் இந்த இரகசியத்தை நன்கு அறிந்திருக்க வேண்டும்! அதாவது "தேவன் அருளிய யாதொன்றிலும் **பூரண மன நிறைவும் திருப்தியும்** கொண்டு வாழ வேண்டும்!".

ஆனால் துயரம் என்னவெனில், தங்களுக்குத் தரப்பட்டவைகளில்

திருப்தி காண்பதற்குப் பதிலாக, தங்களிடம் இல்லாதவைகள் மீதே மனது வைத்து வாழ்வது வேதனையான துயரம் ஆகும்!

**உங்கள் வாழ்க்கையை 'பரலோகமாய் மாற்றும்' இரகசியத்தை அறிந்திருக்கிறீர்களா? அது, தேவன் உங்களுக்கென்று தந்தவைகளே யாகும்..... அவர் அருளித்தந்த யாவற்றின் மீதும் எல்லா பரிசுத்தவான்களும் அளவில்லாத திருப்தியோடு வாழ்ந்தார்கள்!**

ஆகவேதான், இதை அடிப்படையாகக் கொண்டே எண்ணற்ற 'எளியோர்களும்' 'தாழ்ந்த ஜனங்களும்' வெகு சிறப்பான பரலோக வாழ்க்கையை ருசித்திருக்கிறார்கள்! இதற்கு மாறாக பண வலிமையும் அதிகாரமும் கொண்டவர்கள், இந்த உலகத்தின் திரட்சியைப் பெற்றிருந்தாலும், மகிழ்ச்சியற்ற பரிதாப வாழ்க்கையை அன்றும் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்! அதுஏனென்றால் "தனக்கு உண்டானவைகளில் திருப்தி காணாத ஒரு மனுஷனை 'அவனுடைய சொந்த ஆசைகள்' அவனை துரத்திக் கொண்டே செல்லும்!" இவ்வாறு திருப்தி அடையாத தன் விருப்பங்களுக்குப் பலியான ஒரு மனுஷன், எக்காலத்தும் 'போதும் என்கிற மனதுடையவனாய்' இருக்க மாட்டான்!

விசுவாசிகளாயிருந்தாலும், எல்லா ஆத்துமாக்களிடமும் வலிமையான ஆழ்ந்த விருப்பங்கள் இருக்கத்தான் செய்கிறது. இருப்பினும், தங்கள் சுய சித்தத்தை அல்லது தங்கள் **சுய விருப்பத்தை "தேவனுடைய சித்தத்திற்கு இழந்தவர்கள் மாத்திரமே"** தங்கள் கேடான சுய விருப்பங்களுக்குத் தப்பித்து வாழ்கிறார்கள். இந்த விசுவாசிகள் சிலரிடம் "கர்த்தருக்கு இரத்த சாட்சியாய் மரிக்க வேண்டும்" என்ற விருப்பமோ "தங்கள் நெருங்கிய உறவினன் ஒருவன் இரட்சிக்கப்பட வேண்டும்" என்ற ஆத்தும தாகத்தின் விருப்பமோ அல்லது "தேவனுடைய மகிமையை, தான் காண வேண்டும்" என்ற தவிப்பான விருப்பமோ கொண்டிருக்கலாம். இவை அனைத்தும் மிகச்சிறந்த விருப்பங்கள்தான்! "திவ்விய சித்தத்தில் நிலைகொண்டு வாழ்பவன்" மேற்கண்டவிருப்பங் களையும் 'தேவ சித்தத்தில்' இழந்து வாழ்ந்திட முடியும்! ஆகிலும், அவனுடைய ஜெயமோ "**போதுமென்ற மனதில்**" இருப்பதை அறிந்திடக்கடவோம். இந்த உலகில் பூமிக்குரியவைகளோ அல்லது ஆவிக்குரியவைகளோ ஆகிய யாதொன்றிலும் நிறைவான 'போதுமென்கிற திருப்திகொண்டவன்' மாத்திரமே, தேவனை தன் முழு பெலத்தோடு மகிமைப்படுத்துகிறவனாயிருப்பான்!

இயேசு கிறிஸ்துவைப்பற்றி குறிப்பிடப்பட்ட மிக முக்கியமான பகுதியை நாம் அறிந்திருக்க வேண்டும். தேவனுடைய ஆலயத்தை அசுசிபடுத்தியவர்களை அவர் விரட்டி அடித்தபோது "உம்முடைய

வீட்டைக்குறித்து உண்டான பக்தி வைராக்கியம் என்னைப் பட்சித்தது" என்றே கூறினார் (யோவான் 2:17). இவ்வாறு அவரைக்குறித்து எழுதப்பட்ட வேதவாக்கியத்தை **'தேவனுடைய கட்டளையாக'** இயேசு பெற்ற பின்புதான் நிறைவேறியது! எத்தனையோ முறை இயேசு அந்த ஆலயத்தில் இருந்தபோது, இதுபோன்ற செயலை அவர் செய்தது இல்லை! இயேசு தன்னைக் குறித்து அவ்வப்போது கூறிய முக்கியமான வார்த்தை **"என்னுடைய வேளை இன்னும் வரவில்லை"** என்பதை நாம் அறிந்திருக்கிறோம். தன் ஜீவியத்தின் எல்லா பகுதிகளிலும், தன் சொந்த சித்தத்தை பிதாவின் விருப்பத்திற்கு ஒப்புக்கொடுத்து, மன நிறைவோடு வாழ்ந்திடும் யாவருக்கும் 'இயேசுவின் மாதிரி' சொந்தம்! என்பதை அறியக்கடவோம்.

- மேடம் குயான்

---

## அபிஷேகமில்லாமல், ஊழியம் இல்லை!

*கர்த்தரின் உன்னத பெலன் இல்லாமல் 'வீண் பிரயாசமா?'*

ஆவியின் பலத்தோடு செய்வது ஒன்றே கர்த்தரின் ஊழியம்! ஆண்டவரோடு கூடவேயிருந்த சீஷர்களுக்குக் கிடைத்த சிலாக்கியம் பெரிது: அவர்கள்அவரால்அழைக்கப்பட்டவர்கள்!இடைவிடாமல் அவரோடே தங்கினவர்கள்! அவருடைய போதனைகளைக் கேட்டவர்கள்! தாராளமாக அவரோடு சம்பாஷித்தவர்கள்! அவர் செய்த வல்ல செயல்களைக் கண்ணாரக் கண்டவர்கள்! அவருடைய ஜீவியத்தில் விளங்கிய தெய்வீக லட்சணங்களை கவனித்தவர்கள்! ஊழியத்துக்கு அனுப்பப்பட்டு, ஊழியம் செய்து பழகினவர்கள்! சிலுவைக் காட்சியை நோக்கினவர்கள்! உயிர்த்தெழுந்து வந்த ஆண்டவரைத் தரிசித்து மகிழ்ச்சியடைந்தவர்கள்! எங்கும் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி கட்டளை பெற்றவர்கள்! இவ்வளவு அனுகூலங்களும் இருக்க, இனி இவர்கள் புறப்பட்டுப் போகத் தடையென்ன?

**ஆனால், ஆண்டவரோ** அவர்களைப் பார்த்து: "நீங்கள் போகக் கூடாது, எருசலேமிலே காத்திருங்கள்" என்றார். அது அவர்களுக்கு ஆச்சரியமாயிருந்தது. அவர்கள், ஆண்டவரிடம் வேதசாஸ்திரம் கற்றுக்கொள்ளவில்லையா? தமக்குச் சாட்சிகளாயிருக்க வேண்டுமென்று அவர்களுக்கு அவர் சொல்லவில்லையா? அறிய வேண்டிய காரியங்களை இன்னமும் அறிந்து கொள்ளவில்லையா? இனி, ஏன் தாமதிக்க வேண்டும் என்று அவர்கள் திகைக்கிறார்கள்! ஆண்டவர் அவர்களைப் பார்த்து: "நீங்கள் எத்தனை சிலாக்கி

யங்களைப் பெற்றிருந்தாலும் எனக்கு ஊழியம் செய்யத் தகுதியற்றவர்களாயிருக்கிறீர்கள். **உன்னத பலம் உங்களுக்கு இல்லை.** 'இரட்சிப்பின் மாறுதல்' உங்கள் ஜீவியத்தில் இன்னும் நிறைவேறவில்லை. நான் போய் ஆவியானவரை அனுப்புவேன். அவர் வந்து உங்களை நிரப்பும்போது, உங்கள் ஜீவியத்திலும் ஊழியத்திலும் தேவபலம் காணப்படும்! அதற்காகவே நீங்கள் காத்திருக்க வேண்டும் என்றார்.

**அந்தப்படியே சீஷர்கள் காத்திருந்து உன்னத பலத்தைப் பெற்றுக் கொண்டதையும், அதனால் அவர்கள் ஜீவியத்திலும் ஊழியத்திலும் வெளிப்பட்ட ஆச்சரியமான மாறுதல்களையும் அப்போஸ்தலர் நடபடியில் காண்கிறோம்!**

அதேபோல, பவுலைத் தமக்குச் சொந்தமாக்கிக்கொண்ட ஆண்டவர், **அவரை ஆவியினால் நிரப்பியே** ஊழியத்திற்கு அனுப்பினார். அதை, அகமகிழ்ந்து, பவுல் கூறியதைப் பாருங்கள்: "என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது" என்றும், "நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு, **தேவனிடத்திலிருந்து புறப்படுகிற ஆவியையை பெற்றோம்,** அவைகளை நாங்கள் மனுஷ ஞானம் போதிக்கிற வார்த்தைகளால் பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம்" என்றும், "எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடு மாத்திரமல்ல, **வல்லமையோடும் பரிசுத்த ஆவியோடும்** முழு நிச்சயத்தோடும் வந்தது" என்றும் பவுல் தனது ஊழியத்தைப் பற்றி அறிக்கையிடுகிறார் (1கொரி 2:5,12,13; 1தெச.1:5). பவுலின் ஜெபங்கள், சம்பாஷணைகள், பிரசங்கங்கள், பாட்டுகள், ஆராதனைகள், நிருபங்கள் சகலமும் ஆவியானவரின் பலத்தால் செய்யப்பட்டன என்பதற்குச் சந்தேகமில்லை! ஆகையினால்தான் "நான் வீணாக ஓடினதும், வீணாகப் பிரயாசப்பட்டதும் இல்லை என்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாகும்" என்றார்.

**ஆவியானவரின் உன்னத பலத்தைப் பெறாமல், ஆதி அப்போஸ்தலர்கள் இரட்சிப்பின் ஊழியத்தில் பிரவேசிக்கவில்லை! அப்போஸ்தலனாகிய பவுலும் பிரவேசிக்கவில்லை! நமதாண்டவரும் ஆவியின் நிறைவைப் பெறாமல் தமது ஊழியத்தில் பிரவேசிக்கவில்லை! தென்னிந்தியா எங்குமுள்ள தமிழ் சபைகளில் ஊழியம் செய்துவரும் போதகர்களும் பிரசங்கிகளுமாகிய நமது காரியமென்ன?**

ஆண்டவர் வாக்குப்பண்ணின உன்னத பலத்தை நாம் பெற்றிருக்கிறோமா? அநேகர் இதன் அவசியத்தை உணருகிறதேயில்லை! *ஆவியின் அனுக்கிரகமில்லாமல் இந்தப் பரிசுத்த ஊழியத்தைச் செய்து வருவது கீழ்ப்படியாமையும் துணிகரமுமாகும்!* உன்னத பலத்தைப் பெற்றால்தான் தமக்கு ஊழியம் செய்ய முடியும் என்று ஆண்டவர் சொன்னால், "அப்படியல்ல, உன்னத பலம் இல்லாமலே இந்த வேலையைச் செய்ய முடியும்" என்று இவர்கள் நினைக்கிறார்கள். பாட்டு சத்தம் பலமாயிருக்கலாம், வாசிப்பு திருத்தமாயிருக்கலாம், பிரசங்கம் சிறப்பாயிருக்கலாம், ஜெபம் இன்பமாயிருக்கலாம், சபையாரும் மெச்சிக்கொள்ளலாம்! *ஆனால் ஒன்று நிச்சயம்: மாம்சத்தின் முயற்சிகள் ஆவியின் கனிகளைக் கொடுப்பதில்லை. ஆகையால் இப்படிப்பட்டவர்கள் செய்யும் வேலைகள் வீண் ஓட்டமும் வீண் பிரயாசமுமாகும்!*

- பரமானந்தம் ஐயர்

---

## "சாதனை இல்லாத போதனையை" வெறுக்கும் ஆண்டவர்!

*வாழ்ந்து காட்டுவதே முதல் தேவை*

ஒரு கர்த்தடைய தாசன் கூறினதுபோல "இன்று கிறிஸ்தவ மார்க்கத்திலே போதனைகள் மிக, மிக அதிகம்! ஆனால் சாதனைதான் கிடையாது!" சில ஆண்டுகளுக்கு முன்னர், ஒரு கிறிஸ்தவப் பத்திரிக்கையில் "**தேவ மக்கள் எந்த நிலையிலும், எவரிடத்திலும் கடனே வாங்கக்கூடாது**" என்று பல உதாரணங்களோடும், நிறைய வேத வசன ஆதாரங்களோடும் பத்திரிக்கை ஆசிரியர் மிக அருமையான தேவ செய்தி ஒன்றை எழுதியிருந்தார். அந்த செய்தி, வேத வசனத்தின்படி மிகவும் சரியானது! ஆனால், ஓரிரு ஆண்டுகள் கடந்த பின், அந்த ஆசிரியர் எழுதிய மற்றொரு மாதத்தின் இதழை நான் தற்செயலாக படிக்க நேரிட்டபோது, என் கண்களையே என்னால் நம்ப இயலவில்லை! அங்கு அவர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார். *"எங்களுக்குக் கடன் கொடுத்த வங்கிகள் இவைகள்தான்"* என்று குறிப்பிட்டு, அந்த வங்கிகளின் புகைப்படங்களையும் 'கவுரவித்து' போட்டிருந்தார். இதனை ஒரு புறமதஸ்தன் கண்ணோக்குவானானால் என்ன நினைப்பான்? "காப்பி குடித்தால் உடலுக்குத் தீங்குண்டாகும்" என்று பெரிய ஜனக்கூட்டத்தில் பேசிய ஒருவன், அந்தக் கூட்டத்திற்கு முன்பாகவே ஒரு கோப்பை காப்பியைப் பருகுவானானால், அவனைக் குறித்து அக்கூட்டத்தினர் என்ன நினைப்பார்களோ? அதையேதான் மேற்கண்டதை புறமதஸ்தனும் நினைத்திருப்பான்!

*அத்தனை வல்லமையாய் இந்திய உபகண்டத்தில் அடி எடுத்து வைத்த கிறிஸ்தவ மார்க்கம், இன்று புறமதஸ்தாரால் பரியாசம் பண்ணப்படுகின்றது! கிறிஸ்தவர்கள் அதிகமாயுள்ள ஒரு தமிழ் மாவட்டத்தில் வசிக்கின்றதான இந்து மக்கள், கிறிஸ்தவர்களைப் பார்த்து "ஏன் நீங்கள் வீணாகத் தெருக்களிலே நோட்டீஸ்களை ஒட்டிக்கொண்டு, கூட்டங்கள் போட்டுக்கொண்டு, தொண்டை கிழியக் கத்திப் பிரச்சாரம் பண்ணிக்கொண்டு, தெருச்சுவர்களில் எழுதி அவற்றை அலங்கோலமாக்கிக் கொண்டு வருகிறீர்கள்! இவைகள் எல்லாம் வேண்டாம். ஒரே ஒரு காரியம் மட்டும் நீங்கள் செய்யுங்கள்:* **நீங்கள் பேசுகின்ற உங்கள் போதனைகளின்படி எங்களுக்குமுன் வாழ்ந்து காட்டுங்கள்.** *நாங்கள் உங்கள் கிறிஸ்தவ மார்க்கத்தில் வலியவந்து சேர்ந்து கொள்ளுகின்றோம்!" என்று கூறினார்களாம். எத்தனை மெய்யான, ஆழ்த்துவமான சவால்விடும் உண்மை வார்த்தைகள் அவை!*

*கிறிஸ்தவப் போதனைகளைப் பேசுகின்ற, எழுதுகின்ற நாம் எந்த அளவில் அவற்றைக் கடைப்பிடிக்கின்றோம் என்பதனை நாம் சிந்தித்துப் பார்த்தால் நாம் கண்ணீர் சிந்த வேண்டியதைத் தவிர வேறொன்றுமே இல்லை!*

ஜெபத்தைக் குறித்துப் புத்தகம் எழுதிய பிரபல தேவனுடைய ஊழியர் ஒருவர், ஒரு விசுவாசியின் வீட்டிற்கு ஒரு சமயம் சென்றிருந்தார். அந்த வீட்டில் அவர் தங்கியிருந்த நாட்களில், அவர் தனித்து ஜெபம் செய்ததை விசுவாசி காணவே இல்லை. அவரது நடபடிகளும் ஒரு ஜெபமாந்தனுக்குரியதாகத் தெரியவில்லை! அந்த விசுவாசி அதை ஒரு முறை என்னிடம் கூறி மிகவும் விசனமடைந்தார்!

*இந்தவிதமான, கர்த்தருக்குப்பிரியமற்றமுரண்பாடானகாரியங்கள் இன்று நேற்று ஏற்பட்டதல்ல! ஆதிதிருச்சபையின் காலத்திலிருந்தே அது வளர்ந்துகொண்டே வந்திருக்கின்றது. அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல், ரோம திருச்சபைக்கு எழுதும்போது "இப்படியிருக்க,* **மற்றவனுக்குப் போதிக்கிற நீ உனக்குத்தானே போதிக்காமலிருக்கலாமா?** *களவு செய்யக்கூடாதென்று சொல்லுகிற நீ விபச்சாரம் செய்யலாமா? விக்கிரகங்களை அருவருக்கிற நீ கோவில்களைக் கொள்ளையிடலாமா? நியாயப்பிரமாணத்தை* **மீறி நடந்து, தேவனை கனவீனம் பண்ணலாமா?"** *(ரோமர் 2:21-23) என்று எழுதினார்.*

*தேவனுடையஜீவனுள்ளநாமம், மணம்வீசிப்பரவவிடாமல்தடுத்து நிற்பவர்கள், 'கிறிஸ்தவர்களாகிய' நாம்தான்! புறமதஸ்தர்கள், இயேசு இரட்சகரை ஏற்று, அவருடைய பரிசுத்த அடியார்களாகவிடாமல் அவர்களைத் தடைசெய்வது, அனேக கிறிஸ்தவர்களின் சாட்சியற்ற*

*கேடான வாழ்க்கைதான்! இனி, ஒரு பிரசங்கம் அல்ல.... வாழ்ந்து காட்டுவோம்! தேசத்தில் தேவ நாமம் அபகீர்த்தி அகற்றிடுவோம், வாருங்கள்!*

*- கிறிஸ்டோசன்*

---

## பசியுள்ளவனை நிரப்பும் பரிசுத்தாவியானவர்!

*அபிஷேகம் நமது புத்திர சுவீகாரம்*

கடந்த காலப் பாவங்களும், குற்ற உணர்வின் மனசாட்சியும் அதின் தண்டனையும், **இரட்சிப்பின் நாளில்** என் உள்ளத்தை விட்டு அகன்றபோதினும், அந்த இரட்சிப்பானது.... என் பெலவீன பாண்டமான சரீரத்தைத் தாக்கி, வருங்காலப் பாவங்களிலிருந்து என்னை விலக்கிக் காக்க உத்திரவாதமளிக்காது என்ற சத்தியத்தை உணர்ந்து கொண்டேன்!

மேலும், கொடுமையான சித்திரவதைகளின் ஆண்டுகளில் நான் அடைந்த அல்லல்களின் காரணமாக, என் மனதை **ஒருவித பயமும் பகைமை உணர்வும்** மேலாதிக்கம் செலுத்திக்கொண்டிருந்தது! ஈனமான விதத்தில் நான் நடத்தப்பட்டதன் விளைவாக **நம்பிக்கையின்மையும் என்னைக் குறித்த இகழ்ச்சியான மனநிலையும்** என்னை அடிமைப்படுத்தி யிருந்தது! சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்ட எனது வாழ்க்கையில் மற்றொரு அற்புதம் நடைபெறாவிட்டால் அன்றி, எனக்கொரு எதிர்காலமில்லை என்பதை நான் தெளிவாகக் கண்டு கொண்டேன்!

இரட்சிப்பு தேவ கிருபையாலும், விசுவாசத்தாலும் மீட்பரின் கல்வாரி இரத்தப் புண்ணியத்தாலும் கிட்டுகின்றது. ஆனால் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையே தேவனின் ஆசீர்வாதமான ஊழியத்திற்கும், இருதயத்தின் எல்லாக் கசப்பினையும் வேரற்றுப் போகப் பண்ணுவதற்கும் மூலகாரணமாயிருக்கின்றது. ‘அந்த அபிஷேகம்தான்’ ஒரு விசுவாசியை தேவனுக்கு மிகவும் பயனுள்ளதொரு பாத்திரமாக்குகின்றது!

**இரட்சிப்படைந்த ஒவ்வொரு விசுவாசியும் தனது வீழ்ச்சிகளையும், தடுமாற்றங்களையும் மனப்பூர்வமாக உணர்ந்து தங்கள் வாழ்க்கையை முற்றிலும் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்கும்போது மாத்திரமே, அவர் பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனை அவர்களுக்கு அளிப்பார்!**

ஒருநாள், நடு இரவிற்குப் பின்பும் நான் காட்டிலேதான் ஜெபித்துக் கொண்டிருந்தேன். நான் எனது பதுங்கு குழி இருப்பிடத்திற்கு மிகவும் களைப்புடனும், இருதய பாரத்தோடும் வந்து சேர்ந்தேன்.

*களைப்பு மேலோங்க நான் கீழே படுத்துக் கொண்டேன். இந்த சமயம் என் நாவு அசைவற்று அமைதியாக இருந்தபோதிலும், என் இருதயம் தன் மட்டமாக ஜெபித்துக்கொண்டேதானிருந்தது. இப்படியிருக்கும்போது, திடீரென்று ஒருவித* **அதிசய தேவ வல்லமையால் நான் நிரப்பப்பட்டபடியால்** *அந்த நிறைவின் காரணமாகக் கிட்டத்தட்ட நான் பறக்கக்கூடிய நிலைக்கு வந்துவிட்டேன்! என் இருதயத்தில் தளும்பிக் கொண்டிருக்கும் தேவ சந்தோஷத்தின் காரணமாக, நான் என்னை அடக்கிக்கொள்ள கூடாமற்போகவே, நான் ஆனந்தக் குரல் எழுப்பத் தொடங்கிவிட்டேன். என்னுடைய சத்தத்தைக் கேட்டு அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த அனைவரும் விழித்தெழும்பி விட்டனர்!*

*ஆனால் என் இருதயத்தில் யாது நிகழ்ந்து கொண்டிருக்கின்றது என்பது, எனக்கு மட்டுமேதான் தெரிந்தது! இது ஒரு புத்திர சுவிகாரத்தின் நிகழ்ச்சியாயிருந்தது. ஆம், நான் இப்பொழுது பரலோக ராஜாவின் புத்திரன்!*

**எனது பரம தந்தை ஒரு நோக்கத்தோடு என்னை இரட்சித்திருப்தையும், ஆவியால் அபிஷேகித்திருப்பதையும், அவர் என்னைக் கொண்டு தம்முடைய சித்தத்தை நிறைவேற்றப் போகின்றார் என்பதையும் கண்டு கொண்டேன்!**

*பரிசுத்தஆவியானவர் மூலமாக தேவனுடன் நான் பெற்ற இந்த அதிசய ஐக்கியம்.... முழுமையானதாகவும், நன்கு வேர் ஊன்றப் பட்ட தொன்றாகவும் இருந்தமையால், மனுஷீக வல்லமைக்கு அப்பாற்பட்டதான 'வெற்றியுள்ள தலைமை தாங்கி நடத்துவதற்கான' திறமையால் நான் இடைகட்டப்பட்டேன்! என் வாழ்க்கையில் நிகழ்ந்ததான* **இந்த மகிமையின் நிகழ்ச்சியை "புத்திர சுவிகாரத்தின் நாள்" என்றே அழைத்தேன்!**

*நான் தேவ ஆவியால் நிரப்பப்பட்டதின் இரகசியம் யாதெனில்,*

*என்னையே சமூலமாகக் கர்த்தருக்கு அர்ப்பணிக்க மிகுந்த ஆயத்தமுடையோனாய் இருந்ததுதான்! பசியுள்ள பையன் ஒருவன், தான் புசிப்பதற்கு ஆகாரத்தைத் தேடுவதுபோலவே நான் தேவனைத் தேடினேன். தேவன் தாமே, தவனமுள்ள என் ஆத்துமாவிற்குத் தம்முடைய அதிசய மாற்றத்தை உண்டுபண்ணக்கூடியதும், வல்லமையைப் பொழியக் கூடியதுமான பரிசுத்த ஆவியை விசுவாசத்தோடு காத்திருந்த எனக்கு அளித்தார்! அல்லேலூயா!*

*- ஆப்பிரிக்க மிஷனெரி சாமுவேல் மோரிஸ்*

## ‘தற்புகழ்’ தேடுவது பாவம்!

*காலமெல்லாம் தற்புகழ் எதிர்த்திடுங்கள்*

*சவுல் ராஜா,* **தனக்கென்று ஒரு நினைவுகோபுரம்** *அமைத்துக் கொண்டார் என வாசிக்கிறோம் (1சாமு.15:12). தலைமை முன் வகிக்கும் எவருக்கும், சவுலின் இந்த செயல் ஒரு வஞ்சகக் கண்ணி! “தலைவா வணக்கம்” மலிந்துள்ள திரையுலகு மற்றும் அரசியலின் கலாச்சாரம், கிறிஸ்தவத்திற்குள் குறிப்பாக பிரபல்ய பிரசங்கிமார் பலரது ஊழியங்களுக்குள், பரவிவிட்டது! கிறிஸ்தவ உலகில் காணப்படும் இந்த தீமையை தேவன் அருவருக்கிறார்! சூழநிற்கும் விசுவாசிகளின் பாராட்டு அனைத்தையும் ‘தேவனுக்குப் புகழ்ச்சியாய்’ மகிமையை கர்த்தருக்கே திருப்பிவிட பிரபல பிரசங்கிகள் ஓர் நீண்ட முழு முயற்சி எடுக்காவிடில், ஆபத்துதான்! “தன்னைத்தான் உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்; தன்னைத்தான் தாழ்த்துகிறவனோ உயர்த்தப்படுவான்” என்று எத்தனை முறை இயேசு சொல்லியிருந்தாலும், அதை அனேகர் பிரசங்கித்தாலும், அதன்படி வாழ்ந்தவர்கள் வெகு சிலரே! (மத்தேயு 23:12; லூக்கா.14:11;18:14).*

தனக்குள் ‘முளைவிட்டு வளர்ந்த’ தற்புகழ்வை அழித்திட சவுல் தவறியபடியால், அடுத்தடுத்து அனேக வீழ்ச்சிகள் அடைந்தான்! அமெலேக்கியரை அடியோடு அழித்து, அவர்கள் இல்லாது போகும் வரை அவர்களுக்கு எதிராய் போரிடவேண்டுமென்று சவுலைக் கர்த்தர் பணித்திருந்தார் (1சாமு.15:3,18). அவரோ, உடன் பணி செய்த மக்களோ, கால்நடைகளில் முதல்தரமானவற்றையும், நல்லவை அனைத்தையும் அழிக்காது வைத்துக்கொண்டனர்! ஒன்றுக்கும் உதவாதவற்றை மட்டும் அழித்துப்போட்டனர் (வச.9). இதனால், **சவுலை இஸ்ரவேலருக்கு முதல் ராஜா ஆக்கியது** தேவனுக்கு “மிகுந்த விசனம்” உண்டாக்கிற்று (வச.11). தனது மனவேதனையைத் தீர்க்கன் சாமுவேலிடம் தேவன் கொட்டியபோது, அவர் இரவெல்லாம் தூங்காது தேவனை நோக்கிக் கதறினார்:

> இந்த சமயத்தில்தான் சாமுவேல் சவுலைப் பார்த்து, “நீர் உமது பார்வைக்கே சிறியவராய் இருந்த போதல்லவா இஸ்ரவேல் குலங்களுக்குத் தலைவர் ஆனீர்?” என்று நினைப்பூட்டினார் (வச.17; 1சாமு9:21).

*அன்பானவர்களே, தலைமைப் பதவியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், நொறுங்கிய மனதையும் தாழ்மை சிந்தையையும் முடிவு வரை பாதுகாத்து வைத்துக்கொள்வது எளிதல்ல! தேவன்,*

*சவுலை "அகற்றி" தாவீதை "அமர்த்தினார்". தனது முதலாம் மிஷனெரிப் பயண பிரசங்கங்கள் ஒன்றில் பவுல், சவுலின் வீழ்ச்சியை குறிப்பிடும் அளவு, "தன் புகழ் தேடும் தீமை" சரித்திரம் புகட்டும் பாடமாயிற்று (அப்.13:21,22). தேவ ஊழியர் பலரது வாழ்வில் இது நிகழ்ந்துள்ளது!*

**இந்த சவுல் தாவீதை துரத்திய வேளையில் தாவீதின் தாழ்மையை காண்பது நமக்கு பரவசம் தருகிறது! தாவீது கேட்டார்: "இஸ்ரவேலின் அரசர் (சவுல்) யாரைத் தேடிப் புறப்பட்டார்? ஒரு செத்த நாயை அன்றோ? ஒரு தெள்ளுப்பூச்சியை அன்றோ?" (1சாமு.24:14).**

*இயற்கைக்கடன் கழிக்கச் சவுல் ஒரு குகைக்குள் சென்றபோது, அவரது மேலங்கித் தொங்கலை தாவீது அறுத்துக்கொண்டதை சவுல் அறியவில்லை! சவுலை கொல்வது அவ்வளவு எளிதாயிருந்த அந்த வேளையிலும், தாவீது இவ்வார்த்தைகளைச் சொன்னார் (வச.3,4). நமது எதிரிகள் நம்மிடம் சவால்விடும்போது நாம் நமது ஒன்றுமில்லாமையை மறந்துவிடுகிறோம் அல்லவா? தாவீதோ, தன் ஆதிநிலையை மறவாத தாழ்மையை பெற்றிருந்தான். ஊழியங்களில் இருப்போருக்கு ஒரு வார்த்தை: உங்கள் ஊழியத்தை ஆண்டவர் ஆசீர்வதித்து விரிவாக்கும்போது, ஆதரவாளர்கள் பெருகினாலும்* **எதிரிகளும் கூடுவர்** *என்பதே உலகெங்கும் கண்ட உண்மை! நீங்கள் உங்களைக் கர்த்தருக்குள் திடப்படுத்திக்கொள்ளவேண்டிய அதே வேளையில், "உங்கள் எதிராளியை சந்திக்கும் நேரத்திலும்" தாவீதைப்போலவே உங்களது ஒன்றுமில்லாமையை மறந்துவிடாதேயுங்கள்! சர்வ வல்லவருக்குமுன் "இன்னும் உங்களைத் தாழ்மைப்படுத்த, இதனை ஒரு வாய்ப்பாய் பயன்படுத்திக்கொள்ளுங்கள்". போதுமான அளவு நம்மைத் தாழ்த்திவிட்டோம் என்று, 'விழுந்துபோன மனுக்குலத்தைச் சேர்ந்த நாம்' ஒருபோதும் சொல்லிவிட முடியாது!*

*நாம் விழிப்புடனும் எச்சரிப்புடனும் நடக்காவிடில், நமது வெளிப்புற பொலிவான தோற்றமும், இயல்பான திறமைகளும் தேவனோடு கொண்ட நமது சமநிலையை இழக்கச் செய்யும்! (1சாமு.9:2).* **தேவன் நம்மைத் தெரிந்தெடுத்தது அவரது கிருபையினாலேயே** *என்பதை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. இதுவே நம்மை இறுதிவரை, தாழ்மையாய் வைத்துக்கொள்ளச் செய்திடும்! ஊழியத்தில் உயரங்களை எட்டும்போதும், வெற்றிமேல் வெற்றி குவியும்போதும், தேவனுக்குமுன் தாழ்மையாய் நடக்கிறோமா? என்று அவ்வப்போது தற்பரிசோதனை செய்து கொள்வது, சீரழிவிலிருந்து நம்மைக் காக்கும்!*

*- R.ஸ்டான்லி BYM*

## ‘தன் சுயம் ஒன்றே’ சிலுவை வீரனுக்கு எதிரி!

*இயேசுவின் மகிமையை சுதந்தரிக்கும் இரகசியம்*

*யுத்த களத்தில்* **எதிரிகள் மீது குறியாயுள்ள** *போர்ச்சேவகன் எவ்வாறு தன் பிழைப்பிற்கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ள மாட்டானோ, அதேபோல், வாழ்வில் நமக்கு ஏற்படும் சூழ்நிலைகளுக்குள் நாம் சிக்கிக்கொள்ளமல்***எதிரியாகிய***“சுயத்தை” அழிப்பதற்கேகுறியாய்இருக்க வேண்டும். ஆனால் காரியம் என்னவென்றால், இன்று கிறிஸ்துவின் ராணுவத்தில் சேவகம் செய்திட தங்கள் பெயரைப் பதிவுசெய்து கொண்ட அனேக இயேசுவின் சீஷர்கள், தங்களுக்கு ஏற்படும் சூழ்நிலைகளுக்குள் சிக்கிக்கொண்டு சோர்வுற்றுப்போகிறார்கள்! ஆகவேதான் “மகிமை நிறைந்த” கிறிஸ்தவர்களாய் இருப்பதற்குப் பதிலாக, துயரம் நிறைந்த கிறிஸ்தவர்களாய் காணப்படுகிறார்கள்!*

**“கிறிஸ்துவின் பாடுகளுக்குள்” பிரவேசிக்க வேண்டிய இந்த வீரன், சூழ்நிலைகளின் பாடுகளுக்குள் சிக்கிக்கொள்ளுகிறான்!**

*தங்களுக்கு ஏற்பட்ட “ஏராளமான பாடுகள்” என இவர்கள் குறிப்பிடுவதெல்லாம், இவர்கள் பங்கு பெறவேண்டிய “கிறிஸ்துவின் பாடுகள்” அல்ல..... சூழ்நிலைகளின் பாடுகளேயாகும்! இவர்கள் “மனுஷரையும்” “சூழ்நிலைகளையுமே” சிலுவை எனக் கூறுகிறார்கள்! இவர்களை கிறிஸ்துவின் போர்வீரர்களென கூறுவது ஏற்புடையதல்ல! ஆம், இவர்கள் சூழ்நிலைகளில் நசிந்து தளர்ந்துபோன கோழைகள்!*

**இரட்சிப்பின் அதிபதியாகிய தங்கள் கேப்டனுக்கு புகழ்ச்சியை அல்ல, இகழ்ச்சியைக் கொண்டு வருபவர்கள்! ‘தேவ கிருபையின்’ வல்லமையை கொண்டு ‘சுயத்தை’ சிலுவையில் நசித்து ஜெயித்திடாமல், தோற்றுப்போனவர்கள்!**

*மெய்யான கிறிஸ்துவின் வீரன், உபத்திரவங்களில் மேன்மையே பாராட்டுவான்! (ரோமர் 5:4). கிறிஸ்துவின் பாடுகளில்அதிகஅதிகமாய் பங்கு பெறுவதை, தனக்கு கிடைத்த சிலாக்கியமாய் கருதுவான்.* **ஏனெனில், தன்னிடமுள்ள ‘சுயத்தை’ அழித்திட ‘உபத்திரவங்கள்’ தேவன் தந்த நல்ல வாய்ப்பு என அறிந்திருப்பான்!** *தான் அடையும் உபத்திரவங் களை, சூழ்நிலைகளை தேவனுக்கு முன்பாக மாத்திரமே வைத்து, மகிமையில் பங்கடைந்து தன் சிலுவையைச் தீவிரமாய் சுமந்து முன்னேறிக் கொண்டிருப்பான்!*

*- T.ரத்தினகுமார்*

வாழ்ந்து, விசுவாசத்தை முரசொலித்த
மகா உத்தம தாசன்,

# எலியாஸ் அஸ்லாக்ஸன்!



நம்முடைய காலத்தில், 20-ம் நூற்றாண்டில் வாழ்ந்த மிகச்சிறந்த ஆவிக்குரிய தாசன் எலியாஸ் அஸ்லாக்ஸன்! நார்வே கப்பற்படையில் உயர்ந்த பணியில் இருந்த அவர், கிறிஸ்துவின் ஊழியத்திற்காக மதிப்பிற்குரிய தன் பணியை ராஜினாமா செய்து விட்டு, தன் முழு ஜீவியத்தையும் தன் இரட்சகருடைய சுவிசேஷ ஊழியத்திற்காக அர்ப்பணித்தார். **"விசுவாசத்திற்கு கீழ்ப்படிதல்!" அவருடைய சொந்த வாழ்க்கைக்கு உயிர் மூச்சாய் கொண்டார்.** நார்வே 'புரூன்ஸ்டட்' ஆவிக்குரிய சிறந்த சபையின் பல்லாண்டு ஊழியத்தில் விசுவாச வார்த்தைகளை மிக வல்லமையாய் பிரசங்கித்து, சபையை நடத்திச் சென்றார்! அவருடைய புத்தகங்களும், செய்திகளும், **அனைத்து பிரசங்கங்களும் "தேவனுடைய வார்த்தைக்கு 100% உத்தமத்தோடு" வல்லமையாய் விளங்கியது.** 1976-ம் ஆண்டு தன் 88-ம் வயதில் அவர் மரிப்பதற்கு சில வாரங்கள் வரை வாலிபர் முகாம் நடத்தினார். தன்னுடைய புரூன்ஸ்டட் சபையிலும் பிரசங்கித்தார். அவருடைய தேவசெய்தியாவும் மிக கூர்மையாகவும் வல்லமையாகவும் இருந்தது. அவர் மரித்து 45- ஆண்டுகளுக்கு மேலாகியும், இன்றும் அவருடைய வார்த்தைகள் உயிரோட்ட முள்ளதாயிருக்கிறது. **தன் ஜீவிய அனுபவத்திலிருந்து அவர் பிரசங்கித்தப்படியால் மிக ஆணித்தரமாய் பிரசங்கித்தார்.** சுவிசேஷ கூட்டங்களின் வெளி மைதானத்தில் பேசும்போது, திரள் கூட்டத்தார் இரட்சிக்கப்படுவதற்கு மாத்திரமல்லாமல் 'பாவத்தை நடைமுறையாய் ஜெயித்து வாழ்வதற்கும் விசுவாசம் பெற்றார்கள்'. அவர், தேவனிடத்தில் வைத்திருந்த உயிருள்ள விசுவாசத்தை அவர் பிரசங்கிக்க கேட்க எந்த நபரும், விசுவாச தைரியம் பெறாமல் இருக்கவே முடியாது! பல ஆயிரம் கொண்ட கூட்டத்தில் அமர்ந்திருக்கும் ஜனங்கள் 'அங்குமிங்கும் செல்லாமல்' விசுவாச மழையில் நனைந்து கேட்டுக்கொண்டே இருப்பார்கள். அவர் எப்போதுமே அன்பும், நன்மையும் நிறைந்த நல்லவராகவே காணப்பட்டார். அவருடைய மகிழ்ச்சி முகம் ஜனங்களை "தேனை நோக்கி வரும் தேனீக்களாய்" ஈர்த்துக்கொண்டது. அவர் பேசிய சத்தியங்கள் அனைத்தும் அவருடைய உத்தம ஜீவியத்திலிருந்து புறப்பட்டு வரும் நதியாய் இருந்தது. **சத்தியத்தை கடிந்து பேசினாலும் அதில் தெய்வ அன்பு இருந்ததை** ஜனங்களால் கண்டு கொள்ள முடிந்தது. அவரிடம் நெருங்கி பேசுவதற்கு ஒருவர் கூட தயங்கியது இல்லை! தன்னிடம் வந்த அனைவரையும் ஆசீர்வதிப்பதற்கு, பரத்தின் வார்த்தையை தன் நாவில் ஆயத்தமாய் எப்போதும் வைத்திருப்பார். சிறந்த ஆவிக்குரிய புத்தகங்கள் எழுதினார்! நூற்றுக்கணக்கான சிறிய புத்தகங்களை வெளியிட்டார்! மிகச் சிறந்த பாடல்களை எழுதினார்! 1976-ம் ஆண்டு மரித்த அவர் இன்றும் 'உயிருடன்' பேசிக்கொண்டிருக்கிறார்!

- நிருபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

## வாலிபனே 'உன்னை காக்கும் கரத்தை' சிந்தித்துப்பார்!

நீ தூங்கிக்கொண்டிருக்கிற வேளையில் தீங்கு உன்னைத் தொடாதபடி உன்னைக் காக்கிற கரங்களைப் பார்: நீ நித்திரையிலிருந்து விழிக்கும் போது உனக்குச் சுயபுத்தியையும், நினைவையும் அளிக்கும் கரங்கள் அவை! நீ எழும்பி நடக்கும்போது உனக்குப் பெலனளிக்கும் கரங்களும் அவை! நீ அவசரமாக அலுவலகத்திற்குச் செல்லும்போது, வழியில் உன்னைக் காக்கிற கரங்கள் அவை! நீ ரயிலில் பிரயாணம் செய்யும்போது உன்னைக் காக்கிற கரங்கள் அவை! சத்துரு உன்மேல் கண் வைக்கிறபோது உன்னைக் காக்கிற கரங்கள் அவை! நீ செல்வத்தில் மிதந்து கொண்டிருக்கிற வேளையிலும் உன்னைக் காக்கிற கரங்கள் அவை! நீ தரித்திரத்தால் வாடும்போது உன்னைக் காக்கிற கரங்கள் அவை! நீ வேதனையோடு படுத்த படுகையில் கிடக்கும்போதும் உன்னைக் காக்கிற கரங்கள் அவை! நீ மரணத்திகில் கொள்ளும் வேளையிலும் உன்னைக் காக்கும் கரங்கள் அவை! ஆபத்து உன்னை எட்டிப்பிடித்துக்கொண்டிருக்கிற வேளையிலும் தீங்கு அணுகாதபடி உன்னைக் காக்கிற கரங்கள் அவை!

அந்த காக்கும் கரமே, பிணியாளிகள் எல்லாரையும் தொட்டு சுகமாக்கிய கரங்கள்! செத்துக்கிடந்த யவீருவின் மகளைத் தூக்கி உயிர்கொடுத்த கரங்களும் அவையே! ஐந்து அப்பங்களை ஐயாயிரம் பேருக்கு ஆசையோடு அளித்த கரங்கள் அவை! குருடனான பர்த்திமேயுவின் கண்களைத் தொட்டு சுகமாக்கிய கரங்கள் அவை! சிறு குழந்தைகளைத் தூக்கி ஆசீர்வதித்த கரங்கள் அவை! பாரமுள்ள மரச்சிலுவையை உனக்காகத் தூக்கிச் சென்ற கரங்கள் அவை!

வாலிபனே, உன்னை பாவத்திலிருந்து தூக்கியெடுத்து இரட்சிக்க வந்த இரட்சகரின் அன்பு கரத்தை புறக்கணிக்காதே! இன்றே அவரிடம் வா!

- சுவிசேஷ மலர்

சந்தா அனுப்ப QR பயன்படுத்தவும்

maduraichristianfellowship@indianbk

பரலோக பொக்கிஷங்கள்

Published and Owned by:
Madurai Christian Fellowship, Regd Society,
*Editor* T.Rathnakumar, Madurai.
Printed by SFA Print (P) Ltd., Sivakasi.